**விழுப்புரம் மாவட்டம்**

**பத்தாம் வகுப்பு**

**தமிழ்**

**காலாண்டுத்தேர்வு விடைக்குறிப்பு 2024-2025**

| வினா எண் | விடைகள் | மதிப்பெண்கள் |
|---|---|---|
| 1 | அ) வணிகக்கப்பல்களும் ஐப்பெரும்காப்பியங்களும் | 1 |
| 2 | அ) வேற்றுமை உருபு | 1 |
| 3 | ஆ) 3,1,4,2 | 1 |
| 4 | ஈ) இலா | 1 |
| 5 | ஆ) இறைவனிடம் குலசேகராழ்வார் | 1 |
| 6 | ஈ) வானத்தையும் பேரொலியையும் | 1 |
| 7 | அ) அருமை + துணை | 1 |
| 8 | இ) கல்வி | 1 |
| 9 | இ) குறிஞ்சி, மருதம், நெய்தல் நிலங்கள் | 1 |
| 10 | ஈ) உறவினர் | 1 |
| 11 | ஈ) ஈறுகெட்ட எதிமறைப் பெயரெச்சம் | 1 |
| 12 | இ) காற்றே வா | 1 |
| 13 | அ) பாரதியார் | 1 |
| 14 | இ) மயங்கச்செய் | 1 |
| 15 | ஆ) மகரந்தத்- மயலுறுத்து | 1 |
| 16 | **சரியான தொடர்**<br>ஒரு தாற்றில் பல சீப்பு வாழைப் பழங்கள் உள்ளன.<br>ஒரு சீப்பில் பல வாழைப் பழங்கள் உள்ளன.<br>**பிழையான தொடர்**<br>ஒரு சீப்பில் பல தாறு வாழைப்பழங்கள் உள்ளன<br>**காரணம்**<br>தாறு என்பது பெரும்பகுதி. சீப்பு என்பது தாறில் ஒரு பகுதி. தாறில்தான் சீப்பு இருக்குமே தவிர சீப்பில் தாறு இருக்காது. | 2 |
| 17 | அ) ஒரு சில மொழி மீறல்களைச் செய்பவன் யார்?<br>ஆ) எழுத்தைத் தமது ஆயுதமாகக் கொண்டு அதன்மீது அளவற்ற நம்பிக்கை கொண்டவர் யார் ?<br>(ஏற்ற விடையிருப்பின் முழுமதிப்பெண் வழங்கலாம்.) | 2 |

Padasalai.Net

| | | |
|---|---|---|
| 18 | வாருங்கள், அமருங்கள், நன்றாக இருக்கிறீர்களா ?, உணவு அருந்துங்கள்<br>(ஏற்ற விடையிருப்பின் முழுமதிப்பெண் வழங்கலாம்.) | 2 |
| 19 | 1. செயற்கை நுண்ணறிவால் இயங்கும் திறன்பேசிகள்.<br>2. செயற்கை நுண்ணறிவால் இயங்கும் போக்குவரத்து ஊர்திகள்<br>(ஏற்ற விடையிருப்பின் முழுமதிப்பெண் வழங்கலாம்.) | 2 |
| 20 | தன்னிடம் உள்ள பொருளை மறைத்து வைக்காத நல்லார். | 2 |
| 21 | பண்என்னாம் பாடற் கியையின்றேல்; கண்என்னாம்<br>கண்ணோட்டம் இல்லாத கண் | 2 |
| 22 | சிரித்து சிரித்துப் பேசினார் | 2 |
| 23 | எண்- அ, ஆயிரம்- க000, | 2 |
| 24 | வருக - வா(வரு) + க<br>வா- பகுதி, ( வரு எனக் குறுகியது விகாரம்)<br>க- வியங்கோள் வினைமுற்று விகுதி | 2 |
| 25 | அ) ஒரு பானை **சோற்றுக்கு ஒரு சோறு பதம்**<br>ஆ) அளவுக்கு **மிஞ்சினால் அமிர்தமும் நஞ்சு** | 2 |
| 26 | அ) உன் அளவுகோலைக் **கொடு கோடு** வரைந்து விட்டுத் தருகிறேன்<br>ஆ) கண்ணகியின் **விதி** அவளை **வீதிக்குக்** கொண்டு வர வைத்தது.<br>(ஏற்ற விடையிருப்பின் முழுமதிப்பெண் வழங்கலாம்.) | 2 |
| 27 | அ) இன்சொல்- பண்புத்தொகை<br>**இனிமையான சொல்** வாழ்க்கையை இனிமையாக்கும்<br>ஆ) மலை வாழ்வர் – ஏழாம் வேற்றுமைத் தொகை<br>குறிஞ்சி நில மக்கள் **மலையின்கண் வாழ்வர்**.<br>(ஏற்ற விடையிருப்பின் முழுமதிப்பெண் வழங்கலாம்.) | 2 |
| 28 | அ) உரையாடுதல் ஆ) மெய்யொலி | 2 |
| 29 | அ) முன்பின் தெரியாதவர்<br>ஆ) 'விருந்தே புதுமை'<br>இ) தமிழரின் விருந்தோம்பல்<br>(ஏற்ற விடையிருப்பின் முழுமதிப்பெண் வழங்கலாம்.) | 3 |
| 30 | அமிழ்தமாக நான், ஆற்றலாக நான், உலக உயிர்களுக்கு ஆதாரமாய் நான், பல நிறங்களில் நான், உலகில் பிறந்த முந்நீராய் நான் ...<br>(ஏற்ற விடையிருப்பின் முழுமதிப்பெண் வழங்கலாம்.) | 3 |
| 31 | (ஏற்ற விடையிருப்பின் முழுமதிப்பெண் வழங்கலாம்.) | 3 |

Padasalai.Net

| | | |
|---|---|---|
| 32 | • அன்னை மொழியானவள்<br>• அழகாய் அமைந்த செந்தமிழானவள்<br>• குமரிக் கண்டத்தில் நிலைத்து அரசாண்டவள்<br>• பத்துப்பாட்டும், எட்டுத்தொகையும், பதினெண் கீழ்க்கணக்கும், ஐப்பெருங்காப்பியத்தையும் உடையவள். | 3 |
| 33 | • தொழில் செய்வதற்குத் தேவையான கருவி, ஏற்ற காலம், செயலின் தன்மை, செய்யும் முறை, ஆகியவற்றை அறிந்து நாமும் நம் வாழ்வில் கடைப்பிடிக்க வேண்டும்.<br>• ஒரு செயலைச் செய்வற்கான வழிகளை நூல் வழியால் அறிந்து இருப்பினும், உலகியல் நடைமுறைகளை அறிந்து செயல்பட வேண்டும். | 3 |
| 34 | **கம்பராமாயணம்**<br>வெய்யோனொளி தன்மேனியின் விரிசோதியின் மறையப்<br>பொய்யோவெனு மிடையாளொடு மிளையானொடும் போனான்<br>மையோமர கதமோமறி கடலோமழை முகிலோ<br>ஐயோவிவன் வடிவென்பதொ ரழியாவழ குடையான் – **கம்பர்**<br><br>**முல்லைப்பாட்டு**<br>சிறுதாம்பு தொடுத்த பசலைக் கன்றின்<br>உறுதுயர் அலமரல் நோக்கி, ஆய்மகள்<br>நடுங்கு சுவல் அசைத்த கையள், "கைய<br>கொடுங்கோற் கோவலர் பின்நின்று உய்த்தர<br>இன்னே வருகுவர், தாயர்" என்போள்<br>நன்னர் நன்மொழி கேட்டனம் - **அதிவீர்ராம பாண்டியர்** | 3 |
| 35 | அறிந்தது – அறிதல்<br>அறியாதது – அறியாமை<br>புரிந்தது – புரிதல்<br>புரியாதது - புரியாமை<br>தெரிந்தது – தெரிதல்<br>தெரியாதது - தெரியாமை<br>பிறந்தது – பிறத்தல்<br>பிறவாதது - பிறவாமை | 3 |
| 36 | **உவமையணி**<br>**உவமை**: வேல் போன்ற ஆயுதங்களைப் காட்டி வழிப்பறி செய்தல்<br>**உவமேயம்**: அரசன் தன் ஆட்சி அதிகாரத்தைக் கொண்டு மக்களிடம் வரி | 3 |

Padasalai.Net

| | | |
|---|---|---|
| | விதித்தல்<br>**உவம உருபு**; போலும்<br>**குறிப்பு; விளக்கமும் சான்றும் பொருத்தமும் இருத்தல் வேண்டும்,** | |
| 37 | **ஆற்றுநீர்ப் பொருள்கோள்**<br>ஆற்றுநீரின் போக்கைப்போலவே இக்குறளில் சொற்களை வைத்து பொருள் கொள்ளப்படுகிறது.<br>**குறிப்பு; இலக்கணமும் அல்லது விளக்கமும் சான்றும் பொருத்தமும் இருத்தல் வேண்டும்.** | 3 |
| 38அ) | **சுந்தரனாரின் தமிழ்த்தாய் வாழ்த்து**<br>1. நீர் நிறைந்த கடலை ஆடையாக உடுத்திய பூமிப்பெண்ணிற்குப் பாரத நாடே முகமாகத் திகழ்கிறது. அதன் நெற்றியில் திலகமெனத் திராவிட திருநாடு திகழ்கிறது<br>2. உன் இளமையைக் கண்டு, அழகைக் கண்டு வாழ்த்துகின்றோம்.<br>**பெருஞ்சித்திரனாரின் தமிழ்த்தாய் வாழ்த்து**<br>1. பெருஞ்சித்திரனார் தமிழை அன்னை மொழியே !, நறுங்கனியே !, குமரியை அரசாண்ட பேரரசே !, பாண்டிய மன்னனின் மகளே! என்றும்<br>2. தனக்கென தனிச்சிறப்பும் இலக்கிய வளமும் கொண்ட தமிழே! என்றும் வாழ்த்துகிறார்.<br>இருவருமே தமிழின் பழமை, வளமை, செழுமை பற்றி வாழ்த்துகின்றனர். | 5 |
| 38 ஆ) | 1. சங்ககால மக்களின் வாழ்க்கைச் சூழலை உணர முடிகிறது.<br>2. கார்காலமானதால், எப்பொழுதும் மழை வளம் கொழிக்கும் . பகலில் கால்நடைகள் புல் மேய்ந்துவிட்டு மாலையில் வீடு திருப்பும் நேரம்,<br>3. தலைவன் வருகைக்காக காத்திருக்கும் தலைவிக்காக விரிச்சி கேட்டு முது பெண்கள் நின்றனர்.<br>4. முல்லைப் பூக்களோடு நாழியில் நெல் சேர்த்துக் தூவி தெய்வ வழிபாடு செய்து, விரிச்சி கேட்டு நின்றனர்.<br>5. பசியால் வாடிக்கொண்டிருந்த கயிற்றால் கட்டப்பட்ட இளங்கன்றை இடைமகள் பார்த்து " புல்லை மேய்ந்து உன் தாய் விரைவாக வந்துவிடும் வருந்தாதே என்றாள்.<br>6. இச்சொல்லை தலைவியிடம் இடைமகள் கூற உன் தலைவனும் விரைவாக வந்துவிடுவான் என்று கூறி மனதை தேற்றினர். | 5 |

Padasalai.Net

| | | |
|---|---|---|
| 39 | **அலுவலகக் கடிதம்**<br>1. தலைப்பு - ½ மதிப்பெண்<br>2. விடுநர், பெறுநர் - ½ மதிப்பெண்<br>3. விளித்தல் - ½மதிப்பெண்<br>4. பொருள் - ½மதிப்பெண்<br>5. செய்திப்பகுதி - 2மதிப்பெண்கள்<br>6. இடம்மற்றும் நாள் - ½மதிப்பெண்<br>7. உறைமேல் முகவரி - ½மதிப்பெண்<br>------------------------------------------------------------------------------------------------------------------------------------------------------------<br>--------------<br>**உறவு முறை கடிதம்**<br>1. தலைப்பு - ½ மதிப்பெண்<br>2. விளித்தொடர் - ½ மதிப்பெண்<br>3. பொருள் (செய்தி) - 3 மதிப்பெண்கள்<br>4. இப்படிக்கு, இடம் மற்றும் நாள் - ½மதிப்பெண்<br>5. உறைமேல் முகவரி - ½மதிப்பெண் | 5 |
| 40 | படத்திற்கேற்றவாறு கவிதை இருந்தால் மதிப்பெண் வழங்கலாம் | 5 |
| 41 | வினாவில் கொடுக்கப்பட்ட செய்திகளைக் கொண்டு அனைத்து இடங்களும் நிரப்பப்பட்டிருந்தால் மதிப்பெண் வழங்கலாம் | 5 |
| 42 | அ) மரத்தின் அருகே இருக்க மாட்டேன்<br>மின்சாதனங்களைத் தொடமாட்டேன்<br>வானொலி அறிவிப்பைக் கேட்பேன்<br>வீட்டின் மேல்தளத்திற்குச் செல்ல மாட்டேன்.<br>மற்றவர்களையும் பாதுகாப்பாக வைத்துக் கொள்வேன்<br>(ஏற்ற விடையிருப்பின் முழுமதிப்பெண் வழங்கலாம்.)<br>ஆ) மதிப்பிற்குரிய பெரியோர்களே இளங்கோவனாகிய நான் பத்தாம் வகுப்பு படிக்கிறேன். தமிழ்ப்பண்பாடு குறித்துச் சில கருத்துகளைக் கூற இங்கு வந்துள்ளேன். இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே தமிழர்கள் சிறந்த நாகரிகமும் பண்பாடும் கொண்டிருந்த்தைச் சங்க இலக்கியங்கள் காட்டுகின்றன. மொழிக்கும் வாழ்க்கைக்கும் வரையறுக்கப்பட்ட நெறிமுறைகளைப் பெற்றிருப்பவர்கள் யாரெனில் தமிழர்கள். இந்தியா, இலங்கை, மலேசியா, சிங்கப்பூர், இங்கிலாந்து மற்றும் உலகமெங்கும் வாழும் தமிழர்களின் வாழ்க்கை முறையில் தமிழ்ப்பண்பாடு வேர்விட்டுள்ளது. காலத்திற்கு ஏற்ப மாற்றம் பெறும் நம் தமிழ் மொழியை நினைத்து பெருமை கொள்வோம், அனைவருக்கும் நன்றி.. | 5 |

Padasalai.Net

| | | |
|---|---|---|
| 43 அ) | தமிழ் மொழியிலுள்ள கிளை வகை, தண்டு வகை, இலை வகை, பிஞ்சு வகை, வேர் வகை,மணிவகை, போன்றவற்றை விளக்கி எழுதி, இன்று வளர்ந்து வரும் அறிவியல் துறை மற்றும் பிற துறைகளில் உருவாக்கப்படும் பிற சொற்களுக்கு தமிழ் சொல்லாக்கம் தேவை குறித்தும் எழுதி இருந்தால் மதிப்பெண் வழங்கலாம் | 8 |
| 43 ஆ) | கலைஞரின் தமிழ்த் தொண்டுகள் எவையேனும் ஐந்தினைப் பற்றி விளக்கமாக எழுதி இருந்தால் மதிப்பெண் வழங்கலாம் | |
| 44 அ) | உரைநடையில் கையாளப்படும் உரையாடல், உவமை, உருவகம், எடுத்துக்காட்டு உவமை, எதுகை, மோனை, அஃறிணையை உயர்திணையாய் கூறும் விதம், முரண்பாடு மெய்மை, உணர்ச்சி வெளிப்பாடு பேன்ற தலைப்புகளில் விளக்கம் கொடுத்திருந்தால் மதிப்பெண் வழங்கலாம். | 8 |
| 44 ஆ) | புதிய நம்பிக்கை கதையின் மையக் கருத்தைச் சிதையாமல் விளக்கம் கொடுத்திருந்தால் மதிப்பெண் வழங்கலாம். | |
| 45 அ) | சான்றோர் வளர்த்த தமிழ் என்னும் கட்டுரையில் பிள்ளைத்தமிழ், சதகம், பரணி, கலம்பகம், உலா, அந்தாதி, கோவை முதலிய சிற்றிலக்கியங்களைப் பற்றி விளக்கமாக எழுதி இருந்தால் மதிப்பெண் வழங்கலாம். | 8 |
| ஆ) | 1. தலைப்புகொடுத்தல் - 1மதிப்பெண்<br>2. முன்னுரை, முடிவுரை அமைத்தல் - 1மதிப்பெண்<br>3. தலைப்புக்கேற்ற செய்திகளை எழுதுதல்(பொருளுரை மற்றும் உள்தலைப்புகள்) - 4மதிப்பெண்கள்<br>4. மேற்கோள்கள், பழமொழிகள், திருக்குறள்கள்முதலியவற்றை பயன்படுத்துதல் - 1மதிப்பெண்<br>5. நிறுத்தற்குறிகளைப்பயன்படுத்துதல் - 1மதிப்பெண்<br>- முதலியவற்றைப்பார்த்து மதிப்பெண்கள் வழங்கவேண்டும்.<br>ஒற்றுப்பிழை, எழுத்துப்பிழை, கையெழுத்து முதலியவற்றையும் பார்க்க வேண்டும். | |

ஆக்கம் : க. கார்த்திகேயன் தமிழாசிரியர், அ.மே.நி. பள்ளி, கழுப்பெரும்பாக்கம்

அ. சரவணன் தமிழாசிரியர், அ.உ.நி பள்ளி, நெடி.